DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : STC.No.23/2025 | Deposition of Witness for : PW1 |
| Name : தியாகராஜன் | Father/Husband Name : சிதம்பரம் |
| Age : 75 | Village : நாசரேத் |
| Taluk : ஏரல் | Calling : அட்வகேட் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 29 August 2025
Accused absent. Petition filed and allowed.

<u>முதல் விசாரணை</u> :–

1. நான் தற்போது நாசரேத்தில் குடியிருந்து அட்வகேட் தொழில் செய்து வருகிறேன். நான் மனுதாரரின் பொது அதிகார முகவர் என்ற முறையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் அதில் உள்ள விபரங்கள் எனக்கு நன்கு தெரியும். நான் படித்துப்பார்த்து நான் கையொப்பம் செய்தேன். வழக்கின் எதிரி எனக்கு நன்கு தெரியும். அவரது ஊர் நாசரேத் ஆகும்.

2. **05.11.2024 ஆம் தேதியிட்ட ரூபாய் 7 லட்சத்து 50 ஆயிரத்துக்கான தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி, பிரகாசபுரம் கிளை காசோலை எண்.265121 ம.சா.ஆ.1 ஆகவும், 27.12.2024 அன்று மேற்படி காசோலையானது Funds Insufficient என்று திருப்பப்பட்டதற்கான Return Memo அசல் ம.சா.ஆ.2 ஆகவும், 09.11.2024 தேதியிட்ட ரூபாய் 5 லட்சத்துக்கான தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி, பிரகாசபுரம்கிளை காசோலை எண்.265122 ம.சா.ஆ.3 ஆகவும், 27.12.2024 அன்று மேற்கூறிய காசோலை Funds Insufficient என்று திருப்பப்பட்டதற்கான Return Memo அசல் ம.சா.ஆ.4 ஆகவும், 26.12.2024 ஆம் தேதியிட்ட பிரகாசபுரம் கூட்டுறவு நகர வங்கியில் ரூபாய் 7 லட்சத்து 50 ஆயிரம் செலுத்தியதற்கான செல்லான் கவுண்டார் ஃபாயில் ம.சா.ஆ.5 ஆகவும், 26.12.2024 ஆம் தேதியிட்ட பிரகாசபுரம் கூட்டுறவு நகர வங்கியில் ரூபாய் 5 லட்சம் செலுத்தியதற்கான செல்லான் கவுண்டர் ஃபாயில் ம.சா.ஆ.6 ஆகவும், 31.12.2024 ஆம் தேதியிட்டு எதிரிக்கு புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு கைக் காப்பி நகல் ம.சா.ஆ.7 ஆகவும், 16.01.2025 தேதியிட்ட தபால் அலுவலக இணையதள டெலிவரி Track Consignment ம.சா.ஆ.8 ஆகவும், புகார்தாரர் பிரகாசபுரம் கூட்டுறவு நகர வங்கியில் பராமரித்து வரும் சேமிப்புக் கணக்கு ஸ்டேட்மெண்ட் (01.04.2024 முதல் 26.12.2024 வரை) ம.சா.ஆ.9 ஆகவும், புகார்தாரர் திருச்செந்தூர் பாரத ஸ்டேட் வங்கியில் பராமரித்து வரும் சேமிப்புக் கணக்கின் ஸ்டேட்மெண்ட் (01.08.2024 முதல் 31.08.2024 வரை) ம.சா.ஆ 10 ஆகவும், எதிரி கட்டிடத்தில் புகார்தாரர் கன்சல்டிங் கிளினிக் வைத்திருந்த போது வெளியிடப்பட்ட துண்டறிக்கை ம.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

3. பிராமாண வாக்குமூலத்தை ஏற்றுக்கொண்டு எனக்கு காசோலை

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2025.08.29 15:53:58 +0530

கொடுத்து மோசடி செய்த எதிரி மீது தகுந்த நடவடிக்கை எடுக்கும் படி கேட்டுக்கொள்கிறேன்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**</u> இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct. DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2025.08.29 15:54:12 +0530

Judicial Magistrate, Sathankulam.